# இறைவார்த்தை மற்றும் நற்கருணை வழியாக குடும்பங்களை உறுதிப்படுத்துதல்

## திருவிவிலிய ஞாயிறு செய்தி – 2019

### முன்னுரை

குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாக இணையும்போது இரண்டு நிகழ்வுகள் நடைபெறுகின்றன: ஒன்று, அனைவரும் சேர்ந்து உண்கின்றோம், இரண்டு, ஒருவரோடு ஒருவர் உரையாடி மகிழ்கின்றோம். குறிப்பாக, நீண்ட நாட்களாக பிரிந்திருக்கும் குடும்பத்தினர் ஊர்த்திருவிழா அல்லது குடும்ப விழாக்களுக்காக ஒன்றாகக் கூடும்போது, மகிழ்வோடு உண்டு உரையாடுகின்றோம். இன்னும் சிறப்பாக, அனைவரும் இணைந்து உண்பதும் உரையாடுவதும் ஆசிய குடும்பங்களுக்கே உரித்தான தனிச் சிறப்பாகும். ஆக, உணவு நமது கலாச்சாரத்தோடு இணைந்த ஒன்று. அது நாம் உயிர்வாழ்வதற்கான அடிப்படைத் தேவையை நிறைவு செய்வதோடு பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் மேல் வைத்திருக்கும் பாசத்தையும் பராமரிப்பையும் அது வெளிப்படுத்துகின்றது. உரையாடல் வழியாக நமது அன்பு, அனுபவம், அறிவு, பாரம்பரியம் ஆகியவற்றை பிறரோடு பகிர்ந்துகொள்கின்றோம். உண்பதும் உரையாடுவதும் மேலோட்டமாக நடைபெறுவதில்லை. நாம் மிகுந்த மகிழ்ச்சியோடு உண்டு உளமார மனம்விட்டு உரையாடுகின்றோம். ஏனென்றால், குடும்ப உறுப்பினர்கள் இணைந்து வரும்போது உயிருள்ள உறவு மலருகின்றது.

### நற்கருணை (உணவு) திருவிவிலியம் (உரையாடல்)

கடவுள் நமக்கு கொடுத்துள்ள விலைமதிப்பற்ற அருட்கொடைகள் இரண்டு: ஒன்று, தேவநற்கருணை (உணவு), மற்றொன்று திருவிவிலியம் (உரையாடல்). இயேசுவும் யூதர்களும் ஆசியாவைச் சேர்ந்தவர்கள் அல்லவா! தேவநற்கருணை, யூதர்கள் ஆண்டுவிழாவன்று உண்ணப்படும் பாஸ்கா உணவை அடிப்படையாகக் கொண்டது. பாஸ்கா உணவானது யூதர்களின் குடும்ப உணவு (Family ‘makan’) ஆகும். எனவே, தேவநற்கருணை குடும்ப ஒற்றுமையை மீண்டும் நினைவுபடுத்தி, ‘‘கூடி ஜெபிக்கும் அல்லது உண்ணும் குடும்பம் சிதறாது’’ என்பதை வலியுறுத்துகின்றது. ஆக, தேவநற்கருணை உண்மையில் குடும்ப உறவை அல்லது ஒன்றிப்பை உறுதிப்படுத்தும் உணவாகும்.

திருவிவிலியம், தந்தைக் கடவுள் தன் அன்பு குழந்தைகளுக்கு எழுதிய ‘‘காதல் கடிதம்’’ (Love Letter) என்று வருணிக்கப்படுகின்றது. அதில், தந்தைக் கடவுள் என்றும் மாறாத, நிலையானப் பேரன்பை மனித வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே வெளிப்படுத்துகின்றார். நாம் அனைவரும் அவரது அன்பு கட்டளைகளை கடைபிடித்து, நிலைவாழ்வை பெற்றுக்கொள்ளுமாறு நம்மை தொடர்ந்து அழைக்கின்றார். ஆனால், நாமோ இன்று நமது பெற்றோருக்கு கீழ்படிய மறுப்பது போன்று கடவுளுக்கும் செவிசாய்க்க மறுக்கின்றோம்.

### திருவிவிலியம்: ஒரு குடும்பப் புத்தகம்

குடும்பங்களைக்குறித்து, திருவிவிலியம் பழைய ஏற்பாட்டில் இரண்டு முதன்மையான வார்த்தைகளை பயன்படுத்துகின்றது: முதலாவதாக ‘‘யாவே’’[1] எனும் கடவுளின் திருப்பெயர். இரண்டாவதாக, ‘‘மகன்’’[2] எனும் சொல்லாகும். இவ்விரு வார்த்தைகளின் வழியாக தந்தை கடவுளுக்கும் அவருடைய குழந்தைகளாகிய நமக்கும் உள்ள உறவை திருவிவிலியம் காட்டுகின்றது. வாழ்க்கை நடைமுறைக்கு ஏதுவான அறிவுரை மற்றும் ஞானம் மிகுந்த சொற்களை ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனியாகவும் பொதுவாகவும்[3] வழங்கி, பிறரோடு நல்லுறவை

[1] எபிரேய மொழியில் ‘‘யாவே’’ எனும் இச்சொல் கடவுளின் திருப்பெயரைக் குறிக்கின்றது (காண்க: விப 3:14-15). ‘‘யாவே’’ எனும் இவ்வார்த்தை தமிழில் ‘‘ஆண்டவர்’’ என்று மொழிபெயர்க்கப்படுகின்றது.

[2] எபிரேய மொழியில் ‘‘பென்’’ (*Ben*) என்று அழைக்கப்படுகின்றது. காண்க: ‘‘அன்பின் மகிழ்ச்சி’’ எண் 14 (Amoris Laetitia, 14).

[3] ‘‘கணவர் … தம்மீது அன்பு கொள்வதுபோலத் தம் மனைவியின் மீதும் அன்பு செலுத்த வேண்டும். மனைவியும் தம் கணவருக்கு அஞ்சி வாழ வேண்டும்’’ (எபே 5:33); ‘‘தந்தையரே, உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள் … (எபோ 6:4); ‘‘உன் தந்தையையும் தாயையும் மதித்து நட. இதனால், உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு அளிக்கும் நாட்டில் நீ நெடுநாள் நலமுடன் வாழ்வாய்’’ (இச 5:16);

ஏற்படுத்தும் வழிமுறைகளை கற்பிக்கின்றது.[4] துன்பத்திலும் துயரத்திலும் நமக்கு ஆறுதலாகவும், நெருக்கடி வேளையில் நமக்கு ஆற்றலும் திடமுமாகவும், தவறு செய்யும்போது நல்வழிகாட்டியாகவும் அமைகின்றது.

திருவிவிலியம் வெறுமனே, ஆன்மிகத்தை மட்டும் போதிப்பது இல்லை. மாறாக, திருவிவிலியம் குடும்பங்களால் நிறைந்த ஒரு புத்தகம். அவற்றில், குழந்தைகளின் பிறப்பு, காதல் விவரிப்புகள், நெருக்கடிகளில் வாழ்ந்த குடும்பங்கள் பற்றி அதிகம் படிக்கின்றோம்.[5] மேலும், திருவிவிலியம் வழியாக பல்வேறு சூழல்களில் வாழ்ந்து பயணித்த குடும்பங்களைப் பற்றியும் அறிகின்றோம். குறிப்பாக: நம்பிக்கை மற்றும் ஏமாற்ற மனநிலை, நிறையன்பு மற்றும் நம்பகத்தன்மையற்ற நிலை, மகிழ்ச்சி - வருத்தம், வெற்றி - தோல்வி ஆகிய நிலைகளில் வாழ்ந்த குடும்பங்களைப் பற்றி அதிகம் அறிகின்றோம். இவை அனைத்திலும், இறுதியாக ''நன்மை எவ்வாறு தீமையின்மேல் வெற்றிக்கொள்கின்றது'' என்பதும் ''உண்மை எவ்வாறு பொய்மையை தோற்கடிக்கின்றது'' என்பதும் நன்றாக அறியமுடிகின்றது. ஆக, நெருக்கடிகளையும், சவால்களையும் சந்தித்து வாழும் இன்றைய நவீன குடும்பங்களுக்கு திருவிவிலியம் ஆறுதலாக உள்ளது.

திருவிவிலியம் வெறும் வெற்றுச்சொற்களை கொண்டுள்ளது என்று நினைப்பவர்களுக்கு, ''கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது …'' என்று இறைவார்த்தை வாக்குறுதி அளிக்கின்றது (எபி 4:12). ஒரு குடும்பம் அல்லது குழுவினர் ஒன்றாக இணைந்து திருவிவிலியத்தை ஜெப உணர்வோடு வாசிக்கும்போது, திருவிவிலியத்தின் வார்த்தைகள் உயிருள்ளனவாக அவர்களுக்கு மாறுகின்றன. அவர்களிடையே பிரசன்னமாகியிருக்கும் கடவுளின் ஆவியானவரால் அந்தக் குடும்பம் அல்லது குழுவினர் தொடப்படுகின்றனர். ஏனெனில், ''இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன்'' என இயேசுவே வாக்குறுதி அளித்துள்ளார் (மத் 18:20). ஆகவே, குடும்பமாக திருவிவிலியம் வாசிக்கும்போது, மூவொரு கடவுள்[6] அதாவது தந்தை, மகன் தூய ஆவியார் அவர்களுடன் பிரசன்னமாகி அவர்களை முற்றிலும் வழிநடத்துகின்றார் (யோவா 14:23).

**நற்கருணை: வாழ்வாகும் வார்த்தை**

இயேசு வெறுமனே எதையெதைச் செய்யவேண்டும் என்று மட்டும் போதிக்கவில்லை. மாறாக அவர் போதித்ததை வாழ்ந்துகாட்டினார். தான் அன்பு செய்யும் ஒவ்வொருவருக்காகவும தம் உயிரையே கையளித்தார். இன்று பல்வேறு காரணங்களால் உடைந்துபோயிருக்கும் குடும்பங்களுக்கு இயேசுவின் தன்னலமற்ற அன்பே மிகவும் தேவையானதாக உள்ளது: ஒரு வீட்டுத் தலைவர் தனது வாக்குறுதிகளை கடைபிடித்து, தனது குடும்பத்திற்காக தியாகம் செய்கின்றார் (எபே 5:25-33). நாம் திருப்பலி கொண்டாடும்போதெல்லாம், ''இதை என் நினைவாகச் செய்யுங்கள்'' எனும் இயேசுவின் அன்பு வார்த்தைகளுக்கேற்ப அவரது தற்கையளிப்புச் செயலை நினைவுகூர்ந்து அவற்றை நிறைவேற்றுகின்றோம் (லூக் 22:19; 1 கொரி 11:24-26). நாம் கொண்டாடும் திருப்பலி, நாம் அனைவரும் அன்பிலும் சகோதரத்துவத்திலும் ஒன்றித்து வாழ நம்மை அழைக்கின்றது. அதற்காக கடவுளின் அருளால் நாம் ஊக்குவிக்கப்படுகின்றோம்.

ஆகவே, திருவிவிலியம் மீட்புப் பற்றிய தந்தைக் கடவுள் அருளிய வாக்குறுதியின் பதிவேடு என்றால், நற்கருணை அவ்வாக்குறுதியின் நிறைவு அல்லது முழுமையாகும். அவ்வாக்குறுதியின்

---

''நீ இளைஞனாய் இருப்பதால் யாரும் உன்னைத் தாழ்வாகக் கருதாதிருக்கட்டும். பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை, தூய்மை ஆகியவற்றில் நீ விசுவாசிகளுக்கு முன்மாதிரியாய் விளங்கு'' (1 திமொ 4:12). நல்ல மனையாள் (நீமொ 31; திபா 128; இபா 2:16; 6:3).

[4] ''தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை'' (லூக் 23:34); '' … நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும்பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங்கேயே பலி பீடத்தின்முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள்'' (மத் 5:24); '' … முதலில் உங்கள் கண்ணிலிருந்து மரக்கட்டையை எடுத்தெறியுங்கள் …'' (மத் 7:3-5).

[5] காண்க: அன்பின் மகிழ்ச்சி எண் 8.

[6] மூவொரு கடவுளே குடும்பமாக உள்ளார் (காண்க: அன்பின் மகிழ்ச்சி எண்: 11)

அடிப்படையிலேயே நற்கருணை தொடர்ந்து கொண்டாடப்படுகின்றது. ஆகவே, திருவிவிலியமும் நற்கருணையும் ஒன்றில் மற்றொன்று முழுமை பெறுகின்றது. இதைப்போலவே, இறைவார்த்தையும் வாழ்வும் இணைந்து செல்கின்றது. வாழப்படாத இறைவார்த்தை வெற்று வார்த்தையாக நின்றுவிடுகின்றது. மேலும் இறைவார்த்தையினாலன்றி நமது வாழ்வை எளிதாக புரிந்துகொள்ள முடியாது.

திருப்பலிக் கொண்டாட்டத்தில் இறைவார்த்தையும் (வாசகங்கள்) நற்கருணையும் மிக நெருக்கமாக இணைந்துள்ளது. இவை இரண்டையும் கடந்து, திருப்பலி நிறைவேற்றும் குருவானவர் மற்றும் திருப்பலியில் பங்கெடுக்க வரும் இறைமக்கள் ஆகிய இருவரிலும் கடவுளின் உயிருள்ள பிரசன்னம் உள்ளது என்பதை சிந்தித்துப் பார்ப்பது அவசியம். திருப்பலியில் பங்கெடுத்து கிறிஸ்துவையே நேரிடையாகச் சந்திப்பதின் வழியாக இறைமக்களாகிய நாம் இறையருளையும், அவரின் உதவிகளையும் நலன்களையும் பெறுகின்றோம். ஆயினும், பெறுவதைவிட கொடுப்பதே சிறந்தது (திப 20:35). எனவே, தொடர்ந்து வளரவும் இறையருளை முடிவின்றி பெற்றுக்கொள்ளவும் ஒவ்வொருவரும் சாட்சியாக வாழவோம். பெற்றுக்கொண்ட இறையருளை பிறரோடு பகிர்ந்து குடும்பமாக வாழ்வோம்.

**முடிவுரை**

திருப்பலியில் இருவகைகளில் நாம் உண்டு நிறைவடைகின்றோம்: முதலாவதாக, வாசகமேடையில் இறைவார்த்தையை உண்கின்றோம். இரண்டாவதாக, பலிப்பீடத்தில் நற்கருணையை உட்கொள்கின்றோம். அவற்றை வாழ்வாக்க அழைக்கப்படுகின்றோம். திருப்பலியின் வழியாக நாம் கற்றுக்கொண்ட பாடங்களையும் பெற்றுக்கொண்ட அருளையும் வாழ்வில் கடைபிடித்து நம்மோடு வாழும் இறைமக்கள், குடும்பங்கள், நண்பர்கள், நாட்டு மக்கள் அனைவரோடும் வேற்றுமை பாராமல் பகிர முன்வரவேண்டும். ஆகவே, ஒவ்வொரு திருப்பலியும் கடவுளின் அருளை பெறவும், அவற்றில் வளரவும், நம்முடன் வாழும் அனைத்துச் சகோதர சகோதரிகளுடனும் அவற்றைப் பகிர்வதற்கான ஒரு அருமையான வாய்ப்பாக அமைந்துள்ளது. திருப்பலி முடிவில், ''உங்களது வாழ்வால் ஆண்டவரை மாட்சிப்படுத்த அமைதியுடன் சென்று வாருங்கள்'' அல்லது ''ஆண்டவருடைய நற்செய்தியை அறிவிக்க சென்று வாருங்கள்'' என்று கூறுவதுக்கேற்ப முதலில் நமது குடும்பங்களில் ஆண்டவரை மாட்சிப்படுத்தவும், நற்செய்தி அறிவிக்கவும் தொடங்குவோம்.

**குழு ஆய்விற்கு**

1. கடவுளின் வார்த்தை ஆற்றல் மிக்கது. நமது வார்த்தைகளும் நமக்கு மிக அருகில் இருப்பவர்களை குணப்படுத்தவும் அல்லது காயப்படுத்துவும் கூடிய ஆற்றல் பெற்றவை. இவற்றை நாம் அறிந்திருக்கின்றோமா? நன்மையான காரியங்களுக்காக நாம் எத்தனை முறை நமது வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றோம்?

2. வீட்டில் தந்தை அல்லது தாய் தனது அதிகாரத்தை பயன்படுத்துகின்றார். நற்கருணையில் நாம் வாழ தன்னையே உணவாக கொடுக்கும் கிறிஸ்துவைப் போன்று, வீட்டுத்தலைவரும் தனது குடும்ப உறுப்பினர்கள் வாழும்பொருட்டு தனது உயிரைகொடுக்கும் அளவுக்கு தியாகம் செய்யவும் அழைக்கப்படுகின்றார். ஆக, மிகப்பெரிய அதிகாரம் இருக்கும் இடத்தில் பொறுப்புணர்வும் சேவை மனப்பான்மையும் உள்ளன என்பதை நாம் அறிந்திருக்கின்றோமா?